Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 10 2023

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 10, 2023 | ஒளி: 09 கதிர் 102 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

ஈஸ்டர் தாக்குதல் குறித்த

# இரகசிய அறிக்கைகளின் பிரதிகளை வழங்குங்கள்



## கத்தோலிக்க ஆயர்கள் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து வெளிநாடுகளின் இரகசிய சேவைகள் வழங்கிய அறிக்கைகளின் பிரதிகளை இலங்கையில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரியுள்ளது.

12 மறைமாவட்டங்களின் ஆயர்கள் மற்றும் கொழும்பில் உள்ள மூன்று துணை ஆயர்களால் கையொப்பமிடப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஜனாதிபதி தெரிவித்தமைக்கு அமைய, எப்.பி.ஐ., பிரித்தானிய பொலிஸார் மற்றும் இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் இரகசிய சேவைகளின் ஈஸ்டர் தாக்குதல் குறித்த அறிக்கைகளின் பிரதிகளையே ஆயர் பேரவை கோரியுள்ளது.

தொடர்ச்சி P2



## "ஒவ்வொரு போரும் தோல்விதான்"

முழுச் செய்தி P6

இஸ்ரேலில் இலங்கையர்களின்



## தகவல்களை அறிய இலக்கங்கள் இதோ

இஸ்ரேலில் நிலவும் மோதல் நிலைமை காரணமாக , இஸ்ரேலிலுள்ள இலங்கைப் பணியாளர்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்காக இரண்டு விசேட தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2




## தெற்கு, மேற்கில் மண்சரிவு எச்சரிக்கை

நாடு முழுவதும் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக 13 மாவட்டங்களில் 20,480 குடும்பங்களைச் சேர்ந்த 75, 734 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## "அதிர்ச்சியில் பல்டிகள்"



கட்சி மாறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அதிர்ச்சியில் உள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சர் நசீர் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் எம்.பிக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் கட்சி மாறாததால் தான் அஞ்சவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய அமைச்சில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர், நசீர் அஹமட்டுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "நான் ரெடி"



அரசியல் கட்சிகள் 51 சதவீத பெரும்பான்மையை உறுதி செய்யும் பட்சத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயார் என பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "சிக்கல் இல்லை"



சுற்றாடல் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நசீர் அஹமட்டுக்கு எதிராக, உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி, செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்தவிதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தாது என சுதந்திர மக்கள் சபையின் நிறைவேற்று உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## புகை பரிசோதனை செய்யோம்



அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அனைத்து தனியார் பஸ்களுக்கும் புகை பரிசோதனை செய்வதில் இருந்து விலகவுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, திங்கட்கிழமை (09) தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## 5 மாதங்களுக்குள் புதிய பாலம்



பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் தற்போதுள்ள மேம்பாலத்தை அகற்றி ஐந்து மாதங்களுக்குள் புதிய பாலத்தை அமைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## வரி ஏய்ப்போருக்கு வலை

வரி செலுத்தாத செல்வந்தர்களை வரி வலையில் சிக்க வைப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொலிஸாரிடம் இருந்து தகவல்களைப் பெறவுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைக்கு அமைய 50 இலட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி மற்றும் சர்ச்சைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த நிதித் தரவுகளை திணைக்களத்துக்கு பொலிஸார் சமர்ப்பிக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

## ஷாஃப்டரின் சடலத்தை தகனம் செய்ய முடியுமா?



### மன்றுக்கு அறிவிக்குமாறு உத்தரவு

வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டரின் மரணத்துக்கான காரணத்தை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மருத்து நிபுணர்வ குழுவின் உண்மைகளை ஆராய்ந்து சடலத்தை தகனம் செய்ய முடியுமா என்பதை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய, திங்கட்கிழமை (09) உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் திட்டமிடப்பட்ட செயல்

### சூத்திரதாரியை மறைக்கிறது அரசாங்கம்: இராதா

எஸ்.சதீஸ்

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு தாக்குதல் ஒரு திட்டமிட்ட செயலென மலையக மக்கள் முன்னணி தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரேலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முல்லைத்தீவு நீதிபதிக்காக அளுத்கடையில் ஆர்ப்பாட்டம்




முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி வழங்கவும், நீதிபதிகள் மீது அழுத்தம் கொடுப்பதை நிறுத்துமாறும் கோரிக்கைகளை முன்வைத்து முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் அளுத்கடை நீதமன்ற வளாகத்தில் திங்கட்கிழமை (09) காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



தனிப்பட்ட தரவு பாதுகாப்பு

## தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனம்

நாட்டில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபைக்கு, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். மாலைதீவுகளில் உள்ள ஏர்னஸ்ட் என்ட் யங் நிறுவனத்தின் சிரேஷ்ட பட்டயக் கணக்காளரும், முன்னாள் ஆலோசகருமான அர்ஜுன ஹேரத் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இரகசிய அறிக்கைகளின் பிரதிகளை வழங்குங்கள்



இதுபோன்ற அறிக்கைகள் இருப்பது முதல் முறையாக பொது மக்கள் மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று ஆயர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கர்தினால் ஒருங்கிணைந்த மற்றும் மிக முக்கியமான உறுப்பினர் என்பதால், கர்தினால் குறித்து ஜனாதிபதி ஒருமையில் குறிப்பிடுவது கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கூட்டுத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் ஆயர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தான் ஆயர்கள் பேரவையை கையாள்வதாகவும், கார்தினாலுடன் அல்ல என்றும் ஜனாதிபதி தனது நேர்காணலில் குறிப்பிட்டமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தகவல்களை அறிய இலக்கங்கள் இதோ

அதன்படி +94716640560 என்ற வட்ஸ்அப் இலக்கத்தினூடாகத் தகவல்களைப் பெற முடியும். அல்லது 1989 என்ற அவசர அழைப்பு இலக்கத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தைத் தொடர்பு கொள்ள முடியும்.

தற்போது இஸ்ரேலில் கிட்டத்தட்ட 8,000 இலங்கையர்கள் பணிபுரிவதுடன் அவர்களில் 90 வீதமானோர் தாதி சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு அந்நாட்டிலுள்ள இலங்கையர்களின் நிலைமை குறித்து வினவினார்.

இஸ்ரேலிலுள்ள இலங்கைப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அமைச்சர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு முன்னதாகவே அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கு, மேற்கில் மண்சரிவு எச்சரிக்கை

வெள்ளத்தினால் 33,488 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மோசமான வானிலை காரணமாக 13 வீடுகள் முழுமையாகவும் 1,125 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 555 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் பல பகுதிகளில் விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கையை மூன்றாம் கட்டத்துக்கு உயர்த்தியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இதன்படி காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, இமதுவ, நாகொட, யக்கலமுல்ல, களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, வலலவிட்ட, மத்துகம, மாத்தறை மாவட்டத்தில் பிடபெத்தர, அக்குரஸ்ஸ, ஹக்மன ஆகிய நான்கு பகுதிகளும், மக்கள் வெளியேற்றப்பட வேண்டிய பகுதிகளா அறிவிக்கப்பட்டுள்ளன.

# 5 மாதங்களுக்குள் புதிய பாலம்

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் நிரந்தர பாலம் அமைக்கப்படும் வரை 10 நாட்களுக்குள் தற்காலிக அணுகு வீதியை அமைக்கவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் இத்திட்டம் அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு செல்லும் மேம்பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்திருந்த நிலையிலேயே ஜனாதிபதியினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் திட்டமிடப்பட்ட செயல்

தாக்குதல் தொடர்பில் இதுவரை பிரதான சூத்திரத்தாரி இனங்காணப்பட்டாலும் சூத்திரதாரி தொடர்பான தகவல்களை வெளிக்கொணர்வதற்கு அரசாங்கம் மறுக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மஸ்கெலியா லக்சபான பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (08) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணைகளை நடத்துமாறு கோருகின்ற போதும் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசாரணைக்கு அனுமதி வழங்குவதில்லை. தற்போது எமது நாட்டை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி செய்கிறதா அல்லது ஸ்ரீ இலங்கை பொது ஜன பெரமுனை ஆட்சி செய்கிறதா என்பது தெரியவில்லை

நீதி துறையில் நீதியினை வழங்குகின்ற நீதிபதி முல்லைத்தீவு குருந்தூர் மலை தொடர்பான வழக்கு விடயத்தில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையால் நீதிபதி பதவியிலிருந்து பதவி விலகி வெளிநாட்டுக்கு சென்றுள்ள நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணியினை வழங்குவதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம்.

பிழையான திட்டங்களை அரசாங்கம் கொண்டு வருவதன காரணமாக அரசாங்கத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. விவசாயத்துறையில் உரத்தினை இடை நிறுத்தியமையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

உலகத்தில் முதல் ஜனநாயகவாதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டில் இன்று முறையான தேர்தல் ஒன்று இல்லை, ஜனநாயகம் இல்லை மக்களை அடக்குமுறைக்கு உள்வாங்க முயற்சிக்கிறார்” என்றார்.

# “அதிர்ச்சியில் பல்டிகள்”

கட்சி மாறிய சிலர் அமைச்சுப் பதவிகளை வகித்து வருவதாகவும் அமைச்சுப் பதவிகள் மற்றும் உறுப்புரிமைகளை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில் இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதே பயம் உங்களுக்கு இல்லையா என ஊடகவியலாளர்கள் வினவியபோது, கட்சி மாறாததால், அவ்வாறான அச்சம் தமக்கு ஏற்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# “சிக்கல் இல்லை”

நாவலையில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் தலைமை காரியாலயத்தில் திங்கட்கிழமை (09) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு முன்னர், பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலை நடத்தி மக்களின் ஆணையின் பிரகாரம் செயற்படவேண்டுமென மேலெழும்பும் மக்கள் எதிர்ப்புச் சிந்தனையை அடக்குவதற்காக அரசாங்கம், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை கொண்டுவந்துள்து என்றும் அவர் கூறியுள்ளார்.

# வரி ஏய்ப்போருக்கு வலை

இதன் மூலம், நபர்களின் சொத்துக்கள் மற்றும் அவர்கள் எப்படி சம்பாதித்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தவும், வரி வலையில் சிக்கியவர்களிடமிருந்து வரிகளை வசூலிக்கவும் உதவும் என்று நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலதரப்பட்ட முகவர்களிடம் இருந்து தரவைச் சேகரித்து, ஆய்வு செய்து இந்த நிதித் தரவைப் பகிர்வதன் மூலம் வரி ஏய்ப்பாளர்கள் மற்றும் வரி செலுத்தத் தகுதியான செல்வந்தர்களைக் கண்டறிய உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுங்க மற்றும் மது வரித் திணைக்களங்களால், இறக்குமதி வரி மற்றும் அவர்கள் சேகரிக்கும் ஏனைய வரிகள் பற்றிய தகவல்களை இறைவரித் திணைக்களதுடன் பகிர்ந்து கொள்ள பயன்படுத்தப்படுகின்றன.

நிறுவனங்களின் பதிவாளர் மற்றும் மோட்டார் வாகனப் பதிவாளர் ஆகியோர் ஒவ்வொரு மாதமும் புதிய நிறுவனங்கள் மற்றும் வாகனங்கள் வாங்கியதற்கான பதிவேடுகளை இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பவுள்ளனர்.

நிதி நிறுவனங்களிடமிருந்து வாகன குத்தகைத் தரவையும் பெறும் இறைவரித் திணைக்களம், விலையுயர்ந்த வாகனங்கள் கைகளை மாற்றும்போது, வரி புலனாய்வாளர்கள் தங்கள் சொந்த தரவுத்தளத்தை மீண்டும் ஆராய்வதுடன், நிலப்பதிவுகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் நில பரிவர்த்தனைகளுக்கும் திணைக்களத்தால் ஆய்வு செய்யப்படும்.

வரி ஏய்ப்பு செய்பவர்களை வரி அதிகாரிகள் கண்டுபிடிப்பார்கள் என்றும் போதுமான ஆதாரங்களைச் சேகரிப்பது கடினம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனெனில், நீதிமன்ற உத்தரவு இல்லாமல் இறைவரித் திணைக்களத்துடன். தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வங்கிகளுக்கு அதிகாரம் இல்லை என்று தெரியவருகிறது.

# முல்லைத்தீவு நீதிபதிக்காக அளுத்கடையில் ஆர்ப்பாட்டம்




இந்தப் போராட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றமை தடுக்கப்பட வேண்டும், முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவத்திற்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# “நான் ரெடி”

51 சதவீத வாக்குகளைப் பெற முடியும் என அரசியல் கட்சிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்குமாயின், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அதனை உறுதிசெய்ய வேண்டும் என்று தெரிவித்த அவர், நாட்டிலுள்ள 55 இலட்சம் குடும்பங்களில் 11 இலட்சம் குடும்பங்களிலுள்ள 15 இலட்சம் பிள்ளைகள் தம்மால் ஆரம்பிக்கப்பட்ட டிபி கல்வி திட்டத்தினூடாக பயனடைவதாகவும் கூறியுள்ளார்.

# புகை பரிசோதனை செய்யோம்

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் டீசலின் தரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் இல்லாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் வாகனங்களின் புகைப் பரிசோதனை நடைமுறைக்கு சாத்தியமற்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புகைப்பரிசோதனைக்கான நடைமுறை வேலைத்திட்டம் இல்லாத நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு இந்த வாரம் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் அரச வாகனங்களில் புகைப் பரிசோதனை நடத்தும் முறை இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தனியார் பஸ்களுக்கும் புகைப் பரிசோதனையை கட்டாயமாக்கினால், போக்குவரத்து சபை பஸ்களுக்கும் இதே சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஷாஃப்டரின் சடலத்தை தகனம் செய்ய முடியுமா?

உயிரிழந்தவரின் சடலத்தை தகனம் செய்வதே தமது கட்சிக்காரர்களின் கடைசி ஆசை என ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன மன்றுக்கு அறிவித்துள்ளார். உயிரிழந்தவரின் சடலத்தை அடக்கம் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டால், கொழும்பு ஜாவவத்தை பொது மயானத்தில் ஷாப்டரின் மனைவி காணி ஒன்றைப் பெற்றுள்ளதாகவும் மன்றுக்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான், இந்தக் கோரிக்கை தொடர்பில் குடும்ப உறுப்பினர்களின் சத்தியக் கடதாசிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உண்மைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளார்.

மேலும் விசாரணைக்கு இறந்தவரின் உடல் தேவையா? அதை தகனம் செய்ய முடியுமா? என்று மரணத்துக்கான காரணத்தை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய மருத்துவக் குழுவின் தலைவர் பேராசிரியர் அசேல மெண்டிஸிடம் நீதிமன்றில் உண்மைகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டதுடன், மேலதிக விசாரணைக்கான தினமாக 16ஆம் திகதியை அறிவித்தார். பிரேத பரிசோதனை முடிவடைந்த நிலையில் வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டரின் சடலத்தை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு கொழும்பு மேலதிக நீதவான், கடந்த 25ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

# தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனம்

முன்னாள் அரச தரப்புச் சட்டத்தரணி நிசித் அபேசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி சௌமியா அமரசேகர, டிஜிட்டல் சட்ட நிபுணரும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட வரைவு குழுவின் தலைவருமான ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, சர்வதேச தர நிர்ணய அமைப்பின் சான்றளிக்கப்பட்ட கணக்காய்வாளரும் தொழில்நுட்ப முகாமைத்துவ நிபுணருமான பிம்சர செனவிரத்ன, பொறியியல் மற்றும் டிஜிட்டல் மூலோபாய நிபுணர் ஷெஹான் விஜேதிலக ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம். 19 மார்ச் 2022ஆம் திகதி சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காக சட்டம் இயற்றிய முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.

21 ஜூலை 2023ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இதன் ஐந்தாவது பகுதியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம், கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இதன் மூலம், அரசு நிறுவனங்கள், வங்கிகள், தகவல் தொடர்பாடல் செயல்பாடுகள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட நிறுவனங்களால் பொதுமக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் இந்த தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டமானது தனியுரிமைச் சட்டத்தின் உலகளாவிய முன்னேற்றத்திற்கும் அரசு மற்றும் தனியார் துறையின் டிஜிட்டல் மூலோபாயங்களுக்கும் அமைவாக மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.



# பிங்கா ஓயாவால் மூழ்கியது அக்குறணை



கண்டி, அக்குறணை நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக அக்குறணை நகரை அண்மித்து ஓடும் பிங்கா ஓயா ஞாயிற்றுக்கிழமை (08) பெருக்கெடுத்ததில் அக்குறணை நகரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நீரில் மூழ்கியுள்ளது.

அக்குறணை நகரின் சியா வைத்தியசாலை சந்தியில் சுமார் இரண்டு அடி உயரம் வரையும் நகரின் ஏனைய பகுதிகளில் சுமார் ஓரடி உயரம் வரையும் வெள்ளநீர் மட்டம் உயர்ந்து காணப்பட்டது.

அக்குறணை நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தில் வருடா வருடம் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இந்த வெள்ளப்பெருக்கு காரணமாக தொடர்ச்சியாக பொருளாதார இழப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அக்குறணை நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ‘டிக்டொக்’ தோணி கவிழ்ந்ததில் இருவர் மரணம்

■ எம் எஸ் எம் நூர்தீன்



மட்டக்களப்பு- நாவலடி வாவிப்பகுதியில் டிக்டொக் செய்வதற்காக தோணியில் சென்றபோது தோணி கவிழ்ந்ததில் இளைஞர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு உட்பட்ட நாவலடி பகுதியின் சீலாமுனைப்பகுதியில் இருந்து இளைஞர்கள் அறுவர் தோணி ஊடாக ஞாயிற்றுக்கிழமை (08) பிற்பகல் வந்துள்ளனர்.

அப்பகுதியில் டிக்டொக் வீடியோ செய்துவிட்டு தோணியில் மீண்டும் சீலாமுனைக்கு திரும்பிக்கொண்டிருக்கும்போது தோணி கவிழ்ந்துள்ளது.

இதன்போது இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சீலாமுனை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருஸாந்த், மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருஜனன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கிய இளைஞர்களை மீனவர்களும் பொலிஸாரும் இணைந்து மீட்டுள்ளதுடன், சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெள்ளை காரில் வந்து வாள்வெட்டு தாக்குதல்



■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், நல்லூர் அரசடி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (08) இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தன்று இரவு, வெள்ளை நிற காரில் வந்த நான்கு பேர் குறிப்பிட்ட இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த இளைஞன, சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டை உடைத்து கொள்ளை; மூவர் கைது



கோப்பாய் போலிஸ் பிரிவுக்குட்பட்ட உடும்பிராய் மூன்று கோவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (06) வீடு உடைக்கப்பட்டு திருடப்பட்டமை தொடர்பில் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதனை விசாரணை செய்த கோப்பாய் பொலிஸார், மூன்று பேரை சந்தேகத்தின் பேரில், ஞாயிற்றுக்கிழமை (08) கைது செய்துள்ளதோடு, அவ்வீட்டில் திருடப்பட்ட ஏழு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம் உடும்பிராய் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களாக கருதப்படும் மேலுமொருவரை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

# கணவரை காணவில்லை; மனைவி முறைப்பாடு



வவுனியா - சிதம்பரம், முருகனூர் கிராமத்தில் வசித்து வரும் அன்டன் ஜொன்சன் என்பவரை கடந்த 4ஆம் திகதி முதல் காணவில்லை என அவரின் மனைவி சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டிலிருந்த குறித்த நபர் கடந்த 04.10.2023 அன்று காலை 9.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் இன்று வரை வீடு திரும்பவில்லை. இதனையடுத்து, அவரின் மனைவியினால் கணவரை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வீட்டிலிருந்து அவர் வெளியேறுகையில் நீல நிறம் சரம் மற்றும் ரோஸ் கலர் சட்டையும் அணிந்து சென்றிருந்ததாகவும் இவரை கண்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 0776289460 (மகன்), 0774136383 (மனைவி), 0762477411 (மகள்) ஆகிய இலக்கத்திற்கு அறிவித்து உதவுமாறு தெரிவித்துள்ளனர்.

# தேனில் காலிடறிய இளைஞன் மரணம்



பாரிய கற்பாறையில் சுமார் 100 அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்த தேன் கூட்டில் இருந்து தேனை எடுத்துக்கொண்டிருந்த இளைஞன், காலிடறி கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

பதுளை - மடுல்சீமை பகுதியை சேர்ந்த 26 வயதான தங்கையா புஷ்பகுமார் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மடுல்சீமை பகுதியில் உள்ள மலையொன்றுக்கு தேன் எடுப்பதற்காக, தனது இரு நண்பர்களுடன் ஞாயிற்றுக்கிழமை (08) சென்றுள்ளார்.

வாளியொன்றினுள் தேனை சேகரித்துள்ளார். வாளியில் ராட்டுடன் இருந்த தேன், அவர் நின்றிருந்த பாறையின் மீது சிந்தியுள்ளது. அதனை கவனிக்காது, கால்களை வைத்த அந்த இளைஞன், பாறையில் இருந்து வழுக்கி கீழே விழுள்துள்ளார்.

இதனால் பலத்த காயமடைந்த அவரை, மீட்ட சக நண்பர்கள் இருவரும் அவரை பசறை வைத்தியசாலைக்கு கொண்டுச் சென்றுள்ளனர். எனினும், வழியிலேயே அவரின் உயிர் பிரிந்துள்ளது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 16 வயது மாணவனின் தவறான முடிவு

■ பு.கஜிந்தன்



மாணவன் ஒருவன், தவறான முடிவை எடுத்து தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணம் பிதேசத்தில் சனிக்கிழமை (07) பதிவாகியுள்ளது.

ஆலயத்திற்கு சென்று இரவு 10 மணிக்கு வீட்டுக்கு திரும்பியுள்ளார். அப்போது, மகனுக்கும் தந்தைக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. எனினும், இருவரும் நித்திரைக்குச் சென்றுவிட்டனர்.

அதன்பின்னர் ஞாயிற்றுக்கிழமை (08) காலை 6.30 மணிக்கு பெற்றோர், மகனை தேடியபோது, சடலமாக கிடந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் குண்டு, துப்பாக்கி மீட்பு

■ நிதர்ஷன் வினோத்

தென்மராட்சி - சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகுவெளி பகுதியில் மோட்டார் குண்டு மற்றும் ரி-56 துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை (08) காலை மாடு மேய்ப்பதற்காக தனது கால்நடைகளை கொண்டு சென்ற பெண்ணொருவர், வயல் பகுதியில் பற்றையோரமாக குறித்த ஆயுதங்கள் இருப்பதை கண்டுள்ளார்.


இது தொடர்பில் அப்பகுதி கிராம சேவகர் ஊடாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் ஆயுதங்களை பார்வையிட்டதுடன், அவ்விடத்தில் பாதுகாப்பு கடமையிலும் ஈடுபட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவினை பெற்று குறித்த ஆயுதங்களை செயலிழக்க வைக்கும் நடவடிக்கையினை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# மோட்டார் சைக்கிள் மோதி முதியவர் உயிரிழப்பு

■ பு.கஜிந்தன்



தவறான திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில், மன்னார் பெரியகடை பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சந்தியோகு (வயது 72) ஞாயிற்றுக்கிழமை (08) உயிரிழந்துள்ளார்.

உணவு வாங்குவதற்காக, தனது வீட்டிலிருந்து கடைக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் மத்திய கோட்டினை தாண்டி முதியவரது சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த முதியவர் மன்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# பலே கில்லாடியின் பழைய சடலம் மீட்பு

■ ஷேன் செனவிரத்ன



மின்சாரம் தாக்கி மரணமடைந்து பல நாட்களேயான சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுவல காட்டுப்பகுதியில் இருந்து அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதைந்திருந்த, கடும் துர்நாற்றம் வீசிய சடலமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தை சோதனைக்கு உட்படுத்திய போது, சடலத்தின் காற்சட்டை பையில் அலைபேசி ஒன்று இருந்துள்ளது. அதிலிருக்கும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டபோது, இறந்தவரின் மகள் பதிலளித்துள்ளார்.

அதன் பின்னரே, இறந்தவர் முருதலாவை -சூரியகொட பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ரத்நாயக்க 57 வயதான திருமணமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வீடு உடைப்பு மற்றும் கொள்ளை சம்பவங்கள் தொடர்பில் பல வழக்குகள் இவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாத்தளை நீதிமன்றத்தில் மாத்திரம் 45 வழக்குகள் இவருக்கு எதிராக விசாரணையில் உள்ளன. இலங்கை முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் இவருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலத்துக்கு அருகில் பையொன்று இருந்துள்ளது. அதில், வீடுகளை உடைக்க பயன்படுத்திய கருவிகளான ஸ்க்ரூடிரைவர், ரெஞ்ச், கையுறை போன்ற பொருட்கள் இருந்துள்ளன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

காட்டுவழியாக கிராமத்துக்குள் நுழைவதற்காக புகுந்து புதர் வழியே சென்று கொண்டிருந்த போது பன்றிகளை பிடிக்க பொருத்தப்பட்ட மின் கம்பியில் சிக்கி அவர் இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இறந்தவரின் சடலத்திற்கு அருகில் மற்றொரு நபரின் செருப்பு ஜோடி காணப்பட்டதால், மின்சாரம் தாக்கியபோது, அவர் அருகில் மேலும் ஒருவர் இருந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் ஆர். சி.ராஜபக்சவின் அறிவுறுத்தலின்படி, பொலிஸ் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

# பொதுமக்கள் பாதுகாப்பும் சட்டத்தில் சோடை போகும் சீருடையினரும்

பல்லின, பல மதங்கள், பல மொழிகள், பல கலாசாரங்களை பின்பற்றுவோர் வாழும் நாடொன்றில், சட்டம், ஒழுங்கை அச்சொட்டாக கடைப்பிடிக்க வேண்டுமெனில், தாங்கள் சார்ந்த குழுக்களுக்கு ஆதரவாக செயற்படாமல், சகலருக்கும் பொது நீதி என்ற கோட்பாட்டுக்கு அமைவாக செயற்படவேண்டும். இல்லையேல், பொது நியதி, பொது நீதி என்பன கேள்விக்கு உட்படுத்தப்பட்டு, சந்தேகம் கொண்டு பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்துக்கு எதிராக பலமுனைகளில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. போராட்டக்காரர்கள் மீது அவ்வப்போது குண்டாந்தடி பிரயோகமும், தண்ணீர் பீச்சியடைத்து கலைத்தலும், கண்ணீர்ப்புகை தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, இன, மத வேறுபாடுகளின்றி போராட்டத்தில் குதித்திருந்தவர்கள் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

ஆனால், ஆட்சியாளர், அராஜகங்கள் இனங்களுக்கு எதிரான போராட்டங்கள் நடத்தப்படும்போது, குறிவைத்து தாக்குதல் நடத்துவதைப் போல, சிறுபான்மை இனங்களுக்கு எதிராகவே பொலிஸாரின் கை ஓங்கி நிற்கும். இவ்விரு இனங்கள் களத்தில் குதித்திருந்தால், பெரும்பான்மை இனத்துக்கு சார்பாகவும் சிறுபான்மை இனத்துக்கு எதிராகவுமே செயற்படுவர். மட்டக்களப்பில் தமிழ்ப் பண்ணையாளருக்கு நீதி கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்றிருந்த பெண்கள் மீது கடும் தாக்குதலை நடத்திய பொலிஸார், அம்பிட்டிய சுமணரட்ன தேரரின் அடாவடித் தனத்தை வேடிக்கை பார்த்தது மட்டுமன்றி, அவருக்கு தண்ணீர் கொடுத்துள்ளனர். இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களை எட்டி உதைத்தும் உள்ளனர்.

சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொலிஸ் அதிகாரியொருவர் வைத்திருந்த தொப்பியை கையால் தட்டி கீழே தள்ளிவிட்டு, அவர் அணிந்திருந்த சீருடையின் நட்சத்திரத்தையும் பிடுங்கி வீசுவதற்கு அம்பிட்டிய தேரர் முயற்சித்துள்ளார். இது அவரது முதலாவது அடாவடித்தனமும் அல்ல, இறுதி அடாவடித்தனமாகவும் இருக்காது. ஏனெனில், சட்டம் ஒழுங்கை மதிக்காமல் நடந்தமைக்கு எதிராகவும், சீருடை தரித்திருந்த பொலிஸார் தங்களுடைய கடமைகளைச் செய்யவிடாமல் தடுத்தமைக்கு எதிராகவும், பொலிஸாரின் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமைக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அத்தேரருக்கு எதிராக பல வழக்குகள் நீதிமன்றத்தில் கிடப்பில் இருக்கும். எனினும், இலங்கை பொலிஸார், பக்கச் சார்பாக நடந்துகொள்வது அப்பட்டமாகவே தெரிகின்றது. “ஒரே நாடு- ஒரே சட்டம்” என்றால் எத்தரப்பினராக இருந்தாலும் சட்டமும் கையாளும் முறைமையும் சமமானதாக இருக்கவேண்டும். சட்டத்தில் பிரித்தாளும் நிலைமை இருக்குமாயின் சாதாரண அமைதியை எதிர்ப்பார்க்கவே முடியாது.

பேராட்டங்களை நடத்துவதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதேபோல, சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிப்பதற்கு பொலிஸார் கடமைப்பட்டுள்ளனர். அமைதியை சீர்குலைத்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டால் மட்டுமே ஏனைய படையினர் களமிறக்கப்படுவர். இவையெல்லாம், பொலிஸார் நடந்துகொள்வதிலேயே தங்கியிருக்கின்றது. ஆகையால், சோடை போகாது, சட்டத்தை கவனமாக கையாளவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல் சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளிவீசுவதுண்டு.

கோபம் ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்திவிடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காகத் தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாகச் சந்தித்தால், சினம் அடங்கிவிடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது. தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனை பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது. அறிவைக் கெடுக்கும். பிறரின் தூற்றுதலுக்கு ஆளாவார்கள்.

வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அதுவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

எம்.பி. பதவியும்

# கூடுவிட்டு கூடுபாயும் கூத்தும்

மொஹமட் பாதுஷா

கட்சி மாறுவதும் கொள்கை மாறுவதும் இலங்கை அரசியலுக்கோ சிறுபான்மை அரசியலுக்கோ ஒன்றும் புதியதல்ல. அதிலும் குறிப்பாக முஸ்லிம் அரசியலில் ‘கூடுவிட்டு கூடுபாயும் கூத்து’ தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. இது பலரகமாக இடம்பெறுகின்றது எனலாம்.

முஸ்லிம் கட்சிகள் ஒரு குறிப்பிட்ட தேர்தலில் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியில் பெருந்தேசியக் கட்சி ஒன்றை ஆதரித்து மக்களிடம் வாக்குக் கேட்டுவிட்டு, தேர்தல் முடிவடைந்த பிறகு கூட்டத்தோடு அப்படியே அந்தப் பக்கம் தாவி விடுவதை கண்டிருக்கின்றோம்.

குறிப்பிட்டுச் சொல்வது என்றால், ‘ராஜபக்சக்கள் இனவாதத்தை கடைப்பிடிக்கின்றார்கள்’ என்று உணர்ச்சி பூர்வமாக பேசியதன் மூலம், மக்களைச் சூடேற்றி அதனூடாக வாக்குகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால், ராஜபக்சர்களின் கைக்கு அதிகாரம் வந்த பின்னர் பலர் வெளிப்படையாகவும் திரைமறைவிலும் அந்தப் பக்கம் சோரம் போனதை நாமறிவோம்.

ஏனைய பெரும்பான்மை கட்சிகள் விடயத்திலும் இது நடந்திருக்கின்றது. ஒரு முஸ்லிம்; கட்சிபயின் மொத்த எம்.பிக்களும் பெல்டி அடித்த கதையும் உள்ளது. ஓரிருவர் தாவ தயாராக இருக்கின்றார்கள், எனவே கட்சியில் பிளவு வந்து விடும் எனச் சொல்லி கட்சியோடு கூட்டாக அந்தப் பக்கம் போன சந்தர்ப்பங்களும் உள்ளன.

தனிப்பட்ட அரசியல்வாதிகள் தேர்தலுக்கு முன்னர் மக்களிடத்தில் முன்வைத்த நிலைப்பாடுகளை அப்படியே தலைகீழாக மாற்றிக் கொண்டு, கூடுவிட்டு கூடுபாய்ந்த நிகழ்வுகள் முஸ்லிம் அரசியலில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. சிலர் பகிரங்கமாகவும் வேறு சிலர் பின் கதவால் இரகசியமாகவும் இதனைச் செய்து வருகின்றார்கள்.

ஆளும் தரப்பிற்கு ஒரு தேவை வரும்போதுதான் முஸ்லிம் கட்சிகளோ எம்.பிக்களோ இப்படியான நிலைப்பாட்டை எடுக்கின்றன. அது ஒரு சட்டமூலம், அரசியலமைப்பு திருத்தம், நம்பிக்கையில்லாப் பிரேரணை, பட்ஜெட் மீதான வாக்கெடுப்பாக இருக்கலாம். அல்லது அமைச்சரவை நியமனக் காலமாக இருக்கும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாவிய தருணங்களுக்குப் புறம்பாக, குறிப்பிட்ட முஸ்லிம் கட்சியே அனைத்து எம்.பிக்களோடும் கூட்டத்தோடு கோவிந்தா எனப் போன சந்தர்ப்பங்களும் உள்ளன என்பதை மறக்க முடியாது.

அப்போதெல்லாம், சமூகத்தின் நலனுக்காக, பாதுகாப்புக்காக, ‘ஒரே கூடையில் எல்லா முட்டைகளையும் வைக்கக் கூடாது’ என்பதற்காக சாணக்கியமாக, விவேகமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் விளக்கமளித்து வந்தார்கள்.

ஆனால், அதற்குப் பின்னால் இருந்த உண்மையான நிஜக் காரணங்கள் என்ன என்பதை அவர்கள் சொல்லா விட்டாலும், திரைக்குப் பின்னால் நடக்கின்ற சங்கதிகளை, ஏன் இவர் அந்தப் பக்கம் போனார் என்பதற்கான காரண காரியங்களை முஸ்லிம் மக்கள் அறியாத மூடர்கள் அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அநேகமான முஸ்லிம் அரசியல்வாதிகள் அமைச்சு, பிரதி அமைச்சு பதவிகளுக்காக இவ்வாறு தமது நிலைப்பாட்டை திடீரென மாற்றிக் கொண்டார்கள். சிலர் பண ரீதியான டீல்கள் மற்றும் கொந்தராத்து, அபிவிருத்தியை இலக்காக வைத்து இதனைச் செய்தனர். தமது பைல்களை காப்பாற்றுவதற்காக சோரம் போனவர்களும் உள்ளனர் எனலாம்.

ஒரு முஸ்லிம் கட்சியோ அல்லது அந்தக் கட்சியில் உள்ள ஒரு எம்பியோ திடுதிடுப்பென தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் அவர்கள் அதுகுறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தியது கிடையாது. இதனால் முஸ்லிம் மக்கள் பல தடவை மிகுந்த தர்ம சங்கடங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

உதாரணமாக, ராஜபக்ச தரப்பை இனவாதிகள் என விமர்சித்தால், முஸ்லிம் சமூகமும் கிட்டத்தட்ட அந்தக் கருத்துநிலைக்கு வரும். தாம் சந்திக்கின்ற மறுதரப்புக்கு ஆதரவான மக்களிடம் அவர்கள் அதற்காக வாதிடுவார்கள். ஏன் சண்டை பிடித்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

இவ்வாறிருக்கும்போது, கட்சியோ கட்சிக்கார எம்.பியோ பெல்டி அடித்தால், அவர்கள் இலகுவாக அதனைக் கடந்து போவார்கள். ஆனால், அந்த மக்கள் மிகவும் வெட்கித் தலைகுனிந்து போவார்கள். தமது தலைவர், கட்சி, எம்பி ஏன் அந்தப் பக்கம் போனார் என்பதை அவர்களால் நியாயப்படுத்தவே முடியாது போகும்.

இப்படியான சம்பவங்கள் பல தடவை முஸ்லிம் அரசியலுக்குள் நடந்தேறியிருக்கின்றன. ஒரு பக்கம் தேர்தலில் போட்டியிட்டு விட்டு, மக்களைப் பற்றி சிந்திக்காது அல்லது மக்களிடம் அந்தப் பக்கம் தாவுவதற்கான அனுமதியைப் பெறாது, பல்டி அடித்த முஸ்லிம் அணிகள், எம்.பிக்கள் ஏராளம் உள்ளனர்.

சம்பந்தப்பட்ட முஸ்லிம் கட்சி அல்லது அரசியல்வாதியை விடவும் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது முஸ்லிம் சமூகம் என்றுதான் சொல்ல வேண்டும். அதுமட்டுமன்றி முஸ்லிம் அரசியல் பற்றிய ஒரு மட்டரக பார்வையும் இதனால் வலுப்பெற்றது எனக் கூறலாம்.

ஆனால், இப்படி பக்கம் மாறித் தாவிய முஸ்லிம் கட்சிகளை மக்கள் கேள்விக்கு உட்படுத்தவில்லை. முஸ்லிம் அமைப்புக்களோ, புத்தி ஜீவிகளோ, படித்த சமூகமோ அக் கட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

இதேபோல், ஒரு அணியின் எம்.பி. அந்தப் பக்கம் தாவினால் அதற்காக முஸ்லிம் கட்சிகள் நடவடிக்கை எடுத்தது மிகக் குறைவாகும். அந்தப் பக்கம் நாமும் போக வழியுண்டா என்று தேடியோர்தான் அதிகம் எனலாம்.

இவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாமல் போனதற்கு, பெரும்பான்மைக் கட்சிகளின் சின்னத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் போட்டியிட்டதும் ஒரு காரணமாகும்.

இந்தப் பின்னணியில்தான், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து நேரடியாக தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு எம்.பியான அமைச்சர் நஸீர் அஹமட் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது அல்ல என உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது. இதனால் அவர் எம்.பி. பதவியை இழப்பார் என்ற அடிப்படையில், இவ்வெற்றிடத்திற்கு அலிசாஹிர் மௌலானாவை நியமிக்குமாறு கட்சி அறிவித்துள்ளது.

சட்டத்தில் முன்னமே இந்த ஏற்பாடு இருந்ததுதான். ஆனால், ஒரு எம்.பி. கட்சி மாறினாலும் அவருக்கு மக்கள் வழங்கிய ஆணை மாறாது என்ற அடிப்படையில் அந்தப் பதவி வறிதாகாது என்ற ஒரு வியாக்கியானத்தை நீதிமன்றம் முன்னர் வெளியிட்டிருந்தது. ஆனால், அது இப்போது திருத்தி எழுதப்பட்டுள்ளதாக கூறலாம்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்த மு.கா.கட்சியின் முடிவுக்கு மாற்றமாக செயற்பட்டு வாக்களித்து, பின்னர் அப்போதைய அரசாங்கத்திற்கு சோரம் போனார் என்றுதான் மு.கா. கட்சியினால் நஸீர் அகமட் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால், இதே குற்றச்சாட்டுக்கு உள்ளான மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஒரேயொரு நேரடி எம்.பியான முஷாரப் மீது அக்கட்சியும் சட்ட நடவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டாலும், பின்னர் அதில் ஒரு இழுபறி நிலை தொடர்கின்றதாக தெரிகின்றது. இந்நிலையில், நஸிர் அகமட் மட்டும் அகப்பட்டுள்ளார் எனலாம்.

இவ்விவகாரம் முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி பெரும்பான்மை அரசியலிலும் விவாதப் பொருளாகியுள்ளது. ஏனெனில் இவ்வாறு ஒரு கட்சியின் ஊடாக எம்.பி. பதவியைப் பெற்றுவிட்டு மறுதரப்புக்கு பெல்டி அடித்த பலர் தேசிய அரசியலில் உள்ளனர். அவர்கள் எல்லாம் பதவி இழப்பார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

உண்மையில், தேர்தல்கள் இடம்பெறும்போது சிலர் கட்சி மற்றும் அதற்குள்ள செல்வாக்கின் ஊடாக வெற்றி பெறுகின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸைப் பொறுத்தமட்டில் இதில் முதலாம் ரகத்திற்குள்ளேயே உள்ளடங்குகின்றன.

முஸ்லிம் அரசியலில் நஸீர் அகமட்டிற்கும் அலிசாஹிர் மௌலானாவுக்கும் ஒரு வரலாறு உள்ளது. அந்த வரிசையில் இந்த தருணத்தில் ஒப்பீட்டளவில் இதில் யார் அதிகாரத்தில் இருப்பது நல்லது என்ற ஒரு கணிப்பும் முஸ்லிம் சமூகத்திற்குள் இல்லாமலும் இல்லை.

நஸீர் அகமட் சாதிக்காத சமூக விவகாரத்தை அலிசாஹிர் வந்து சாதித்து விடுவார் என்று யாரும் கூறி விடவும் முடியாது.

ஆனால் அவர் பதவி இழந்து, அந்த இடத்திற்கு அலிசாஹிர் வருவது ஏனைய முஸ்லிம் எம்.பிக்களுக்கு மட்டுமன்றி, சிங்கள எம்.பி.க்களுக்கும் ஒரு பாடமாக அமையும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி தேசிய அரசியலிலும் சில மாற்றங்களை உண்டுபண்ணலாம்.

அப்படியே, எம்.பிக்கள் கட்சி தாவுவதற்கு எதிராக எடுக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கை போல, மொத்தமாக ஒரு முஸ்லிம் கட்சி, கட்சியாக கூண்டோடு குத்துக்கரணம் அடிப்பதற்கு எதிராகவும் ஏதாவது சட்ட ஏற்பாட்டைக் கொண்டு வர முடிந்தால் இன்னும் நல்லது.

## கடிதங்கள்

### காட்டு பன்றிகள் தொல்லை

பட்டப் பகலில் காட்டு பன்றிகள் நடமாட்டம் அதிகம் உள்ளதால், தங்களுக்கும் தங்களுடைய பிள்ளைகளுக்கும் பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளதாக நல்லத்தண்ணி நகர் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சிவனொளிபாத மலை பருவகாலம் நிறைவுற்ற நிலையில், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஒரு சிலர் மட்டுமே, சிவனொளி பாதமலைக்கு வந்து செல்கின்றனர். இதேவேளை, இரவு நேரங்களில் மட்டுமன்றி பகல் வேளைகளிலும் காட்டு பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

அந்த பன்றிகளிடம் இருந்து உல்லாசப் பயணிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை காப்பாற்ற வேண்டும் எனவும், கோரிக்கை விடுத்துள்ளனர்.

“கூட்டம் கூட்டமாகப் பன்றிகள் சுற்றி திரிவதால் நாங்கள் பீதியில் உள்ளோம்” என மக்கள் இது குறித்து சம்பந்தப்பட்ட வன பாதுகாப்பு அதிகாரிகள், உடனே கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

செ.தி.பெருமாள்



# மோந்து பார்த்தாலே போதும்



சின்னத்திரையில் டொப் நடிகையாக ரவுண்டு கட்டிய ரட்சிதா மகாலட்சுமிக்கு இன்றும் ஏகப்பட்ட ரசிகர்கள் இருக்கின்றனர். இவர் பிக் பொஸ் சீசன் 6 நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு தற்போது ஒரு சில பட வாய்ப்புகள் கிடைத்துள்ளது.

தற்போது ராதா மோகன் இயக்கத்தில் உப்பு கருவாடு படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் ரட்சிதா மகாலட்சுமி நடித்து வருகிறார். இந்த நிலையில் அவர் தனக்கு இருக்கும் ஹோர்மோன் நோயை குறித்து வெளிப்படையாக தெரிவித்துள்ளார். ரட்சிதாவிற்கு வந்திருப்பது ஒரு அரியவகை நோயாம். பொதுவாக ஒருவருக்கு அதிக உணவு உட்கொண்டால் தான் வெயிட் கன்னா பின்னான்னு ஏறும். ஆனால் ரட்சிதாவிற்கு எதுவும் உட்கொள்ளாமலே உடல் ஏறுகிறதாம். உணவை மோந்து பார்த்தாலே போதும் சோலி முடிஞ்சது.

# ரிலீஸுக்கு முன் எகிறியது



விஜய் ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கும் லியோ திரைப்படம் திரைக்கு ஒக்டோபர் 19ம் திகதி வரவிருக்கிறது.

சமீபத்தில் தான் இப்படத்தின் டிரைலர் வெளிவந்து மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் 24 மணி நேரத்தில் அதிக பார்வையாளர்களால் பார்க்கப்பட்ட ஒரே தமிழ் பட டிரைலர் என்ற சாதனையையும் லியோ படைத்துள்ளது.

லியோ படத்தின் பிசினஸ் இதுவரை ரூ. 487 கோடி வரை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தின் பட்ஜெட் மட்டுமே ரூ. 300 கோடி வரை இருக்கும் என இயக்குனர் லோகேஷ் கனகராஜ் கூறியிருந்தார்.



# 'Y+' பாதுகாப்பு

நடிகர் ஷாருக்கானுக்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல்கள் வருவதாக வந்த புகாரின் அடிப்படையில், அவருக்கு 'Y+' பிரிவு பாதுகாப்பு வழங்கப்போவதாக மகாராஷ்டிர பொலிஸார் அறிவித்துள்ளது.

கொலை மிரட்டலைத் தொடர்ந்து நடிகர் ஷாருக்கானுக்கு மகாராஷ்டிரா அரசு, 'Y+' பாதுகாப்பை வழங்கியது.

'பதான்' மற்றும் 'ஜவான்' படங்களுக்கு பிறகு தனக்கு கொலை மிரட்டல் அழைப்புகள் வருவதாக ஷாருக்கான் எழுத்துப்பூர்வமாக புகார் அளித்த நிலையில் மகாராஷ்டிரா பொலிஸ் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளது.

'பதான்', 'ஜவான்' என இரண்டு திரைப்படங்கள் வெளிவந்து ரூ.1000 கோடிக்கு மேல் வசூல் சாதனை படைத்தது.

இந்த சூழலில் ஷாருக்காருனுக்கு கொலை மிரட்டல் வந்துள்ளமை அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஜப்பானில் கீர்த்தி ஷெட்டி



நடிகர் கார்த்தி நடித்துவரும் 26ஆவது படமான ஜப்பானில் கீர்த்தி ஷெட்டி நாயகியாக இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

'ஜிப்சி' படத்திற்கு பிறகு ராஜுமுருகன் இயக்கி வரும் படம் ஜப்பான். இதில் கார்த்தி நாயகனாகவும், அனு இமானுவேல் நாயகியாகவும் நடிக்கின்றனர்.

நலன் குமாரசாமி இயக்கும் பெயிரிடப்படாத இந்த படத்தின் படப்பிடிப்பு 50 சதவீதம் முடிவடைந்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# கவர்ச்சி போட்டோஷூட்



மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மூத்த வாரிசும், பொலிவூட் நடிகையுமான ஜானவி கபூர், தெலுங்கின் முன்னணி நட்சத்திர நடிகரான ஜூனியர் என்டிஆர் கதையின் நாயகனாக நடிக்கும் பெயரிடப்படாத படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கிறார் என உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகியிருக்கிறது. நடிகை ஜானவி கபூர் தாராள கவர்ச்சி போட்டோஷூட் படங்கள் வைரலாகியுள்ளன.

# சிக்கலானது ரவிக்கை



மேலாடையை மட்டும் அணிந்து நிற்குமாறு படத்தின் இயக்குநர் வலியுறுத்தியதும், அதற்கு மறுப்பு தெரிவித்து பொலிவுட் நாயகி மாதுரி தீட்ஷித் அந்த படத்திலிருந்து விலகியதுமாக, 34 வருடங்களுக்கு முந்தைய சம்பவம் ஒன்றை அப்படத்தின் இயக்குநர் டினு ஆனந்த் தற்போது தெரிவித்துள்ளார்.

1980களில் அமிதாப் பச்சன் நட்சத்திரமாக ஒளிர்ந்தபோது அவருக்கு ஜோடியாக நடிகையர் மத்தியில் போட்டி நிலவியது. அமிதாப் பச்சனை நாயகனாக கொண்டு 'காலியா' மற்றும் 'ஷாஹேன்ஷா' போன்ற பிரபலமான திரைப்படங்களைத் தயாரித்த டினு ஆனந்த், 1989இல் 'ஷனாக்த்' என்ற படத்திற்கு அமிதாப்புடன் நாயகியாக மாதுரி தீட்சித்தை ஒப்பந்தம் செய்தார்.

கதைப்படி, வில்லன்கள் வசம் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும் அமிதாப்பை மீட்க, தனது ரவிக்கையைக் கழற்றிக்கொண்டு மேலாடையுடன் கேமரா முன்பாக மாதுரி தீட்ஷித் தோன்ற வேண்டும். இந்த நிபந்தனையை விளக்கியே மாதுரியை ஒப்பந்தம் செய்திருந்தார். ஆனால், உள்ளாடையுடன் கேமரா முன்பாக தோன்றுவதில் மாதுரிக்கு சங்கடம் எழுந்தது.

## சந்திரமாதா ஆலய திருவிழா



நுவரெலியா, இராகலை நகரில் வரலாற்று சிறப்புமிக்க சந்திரமாதா ஆலய வருடாந்த திருவிழா ஞாயிற்றுக்கிழமை (08) வெகு விமர்சையாக நடைபெற்றுள்ளது.

தலவாக்கலை சென்கிளயார் சென் பெற்றீக் ஆலய அருட் தந்தை டொமினிக் சந்தனம் தலைமையில் இடம்பெற்ற இந்த வருடாந்த திருவிழாவின் திருப்பலி பூசையை இராகலை சந்திரமாதா ஆலய தந்தை அருட் லெணாட் விஜயவர்தன தலைமைத் தாங்கி நடத்தியுள்ளார்.

ஆ.ரமேஸ்



## பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு



கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திகிலிவெட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றுள்ளது. இலங்கை பாதுகாப்புப் படையணரின் வழிகாட்டலில் 12 அவது இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் மற்றுமோர் அங்கமாக 18 பாடசாலைகளை உள்ளடக்கிய 119 மாணவர்களுக்கு இந்த கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

ஆர்.ஜெயஸ்ரீராம்





## ஏர் பூட்டு விழா





அக்கரைப்பற்று விபுலானந்தா இந்து இளைஞர் மன்றத்துக்குச் சொந்தமான சாகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய நெற் செய்கை காணியில் ஏர்பூட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (08) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

வி.சுகிர்தகுமார்



## ஜேர்சிகள் கையளிப்பு...



கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரியின் கரப்பந்தாட்ட வீரர்களுக்கான ஜேர்சிகளை 99ஆம் ஆண்டு கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் கல்லூரியின் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

ஆ.ரமேஸ்டி, சந்ரு



## இலவச பயணச் சீட்டு



சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு இலவச பயணச் சீட்டு வழங்கும் நிகழ்வு இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபையின் ஆளுநர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

சிவா ஸ்ரீதரராவ்



## சர்வதேச ஆசிரியர் தின விழா



சம்மாந்துறை வலய நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய சர்வதேச ஆசிரியர் தின விழா அதிபர் நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றுள்ளது. நிகழ்வில், பிரதம அதிதியான நாவிதன்வெளிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், நட்சத்திர அதிதியான வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளனர்.







பீகார்

# 24 பெண்கள் நீரில் மூழ்கி பலி

பீகார் மாநிலத்தில் ஜிவித்புத்ரியா பண்டிகையின்போது விரதம் இருந்து நீராடச் சென்ற 24 பெண்கள், நீரில் மூழ்கி பலியாகியுள்ளமை அந்த மாநிலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வட இந்தியாவின் பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் மாநிலங்களிலும், அண்டை நாடான நேபாளத்திலும் இந்த மாதத்தில் ஜிவித்புத்ரிகா எனும் பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.



மொத்தம் மூன்று நாட்கள் கொண்டாடப்படும் இந்த ஜிவித்புத்ரிகா பண்டிகையின்போது தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் நலனுக்காக உண்ணாவிரதம் இருப்பார்கள்.

மூன்று நாள் உண்ணாவிரத முடிவில் ஆறு, குளம் போன்ற நீர்நிலைகளில் நீராடி தங்கள் விரதத்தை முடிப்பார்கள்.

அப்படி ஞாயிற்றுக்கிழமை (08) நடந்த இந்த பண்டிகையின்போது நீர் நிலைகளில் நீராடிய பெண்கள் 24 பேர் பலியாகியுள்ளனர்.

அசாம்

## இறுதிச் சடங்கில் சிலிர்த்த சிசு

இந்தியாவின் அசாம் மாநிலத்தை சேர்ந்த பெண்ணொருவருக்கு பிரசவவலி ஏற்பட்டு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு மருத்துவர்கள், தாய், சேயில் ஒருவரை மட்டுமே காப்பாற்ற முடியும் என தெரிவித்துள்ளனர்.

அதன்படி அந்த பெண்ணுக்கு பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. தாய் நலமாக இருப்பதாகவும், சிசு இறந்தே, பிறந்ததாகவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர். பின்னர் அந்த ஆண் சிசுவை இறப்பு சான்றிதழுடன் குடும்பத்தினரிடம் வைத்தியசாலை நிர்வாகம் ஒப்படைத்துள்ளது.

அதனை தொடர்ந்து, இறுதி சடங்குக்காக குடும்பத்தினர் சிசுவை மயானத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். அப்போது சிசு சிலிர்த்துள்ளதுடன், அழுதுள்ளது. இதைக் கண்டு அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

உடனடியாக சிசுவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். தற்போது அந்த சிசு நலமாக உள்ளது. இதனிடையே சிசு இறந்துவிட்டதாக கூறிய தனியார் வைத்தியசாலை முன்பு திரண்ட பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆதித்யா எல்–1

## பயணப் பாதை மாற்றியமைப்பு



சூரியனின் புறவெளியை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் அதிநவீன விண்கலத்தை வடிவமைத்த இஸ்ரோ, அதை பிஎஸ்எல்வி சி-57 ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தியது.

அதன் பின்னர் அந்த விண்கலம் புவி சுற்றுப்பாதையில் இருந்து செப்டம்பர் 19ஆம் திகதி விடுவிக்கப்பட்டு, சூரியனை நோக்கி பயணிக்கும் வகையில் அதன் செயல்பாடுகள் மாற்றி அமைக்கப்பட்டன. விண்ணில் செலுத்தப்பட்ட 28 நாள்களில் 9.2 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவுக்கு பயணித்து, முழுமையாக புவியின் ஈர்ப்பு விசை மண்டலத்தை கடந்து எல்-1 புள்ளியை நோக்கி விண்கலம் பயணித்து வருகிறது.

இந்நிலையில், ஆதித்யா எல்-1 விண்கலத்தின் பயணப் பாதையில் தற்போது வெற்றிகரமாக மாற்றியமைக்கப் பட்டஉள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

வத்திக்கான்

# “ஒவ்வொரு போரும் தோல்விதான்”

வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் சிறப்பு பிரார்த்தனைக்கு பிறகு பொதுமக்கள் மத்தியில் பேசிய போப் பிரான்சிஸ், இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்து வேதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் பேசுகையில், “இஸ்ரேலின் தற்போது நடப்பது அச்சமும், வேதனையும் அளிக்கிறது.



பயங்கரவாதமும், போரும் தீர்வுகளை கொண்டுவருவதில்லை, மரணத்தை மட்டுமே கொண்டு வருகின்றன.

போர் ஒரு தோல்வி. ஒவ்வொரு போரும் தோல்விதான். எனவே, போரை உடனடியாக நிறுத்தும்படி இருதரப்பையும் வேண்டுகிறேன்" என கூறியுள்ளார்.

இதனிடையே இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே பதற்றம் அதிகரித்து வருவது குறித்து கவலைதெரிவித்துள்ள சீனா, நிலைமை மேலும் மோசமடைவதை தவிர்க்கவும், பொதுமக்களைப் பாதுகாக்கவும் அமைதி காக்கும்படி இரு தரப்பையும் வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேல்

## போர்க்களமாக மாறிய இசை நிகழ்ச்சி

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் சனிக்கிழமை (07) திடீரென்று தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும், இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்து கண்ணில் கண்டவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளியுள்ளனர்.

இஸ்ரேலில் ஜெவிஷ் விடுமுறை கொண்டாடப்பட்டு வந்தநிலையில் காஸா-இஸ்ரேல் எல்லையில் உள்ள கிராமப் பகுதியில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மக்களும், வெளிநாடுகளை சேர்ந்த இசைக்கலைஞர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இந் நிகழ்ச்சியில் காஸா பயங்கரவாதிகள் திடீரென புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அங்கிருந்து 260 பேர் உடல்கள் மீட்கப்பட்டதாக, இஸேல் மீட்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்ச்சிவில் கலந்து கொண்டவர்களில் பலரை ஹமாஸ் இயக்கத்தினர் பிணைக் கைதிகளாக பிடித்து சென்றுள்ளதாக தெரிவித்துள்ளது.



பாரிஸ்

## மூட்டைப்பூச்சால் தவிக்கும் பாரிஸ்

பாரிஸில் அமைந்துள்ள பொதுப் போக்குவரத்துகள், ஹோட்டல்கள், திரையரங்குகள் மற்றும் வீடுகள் என அனைத்து இடங்களிலும் பரவலான மூட்டைப்பூச்சி தொல்லையால் போராடி வருகிறது.

கோடை காலத்தில் சிறிய அளவிலான மூட்டைப்பூச்சிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் திரையரங்குகளில், தேசிய அதிவேக ரயில்கள் மற்றும் பாரிஸ் மெட்ரோ இரண்டிலும் மூட்டைப் பூச்சிகள் ஊர்ந்துள்ளன. மூட்டைப் பூச்சி கடித்தல் அதிகரித்துள்ள நிலையில், அதற்கான சிகிச்சைக்கான தேவை அதிகரித்துள்ளது. மூட்டைப் பூச்சிகள் நோய்களைப் பரப்புவதில்லை என்றாலும், அவற்றின் இருப்பு மன ஆரோக்கியத்தை கடுமையாக பாதிக்கும் என்பதால் முற்றாக ஒழிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணம்:

# அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்த இந்தியா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலியா உடனான போட்டியில் இந்தியா வென்றது.




ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 199/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்டீவன் ஸ்மித் 46 (71), டேவிட் வோர்னர் 41 (52), மிற்செல் ஸ்டார்க் 28 (35), மர்னுஸ் லபுஷைன் 27 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 3/28, ஜஸ்பிரிட் பும்ரா 2/35, குல்தீப் யாதவ் 2/42, இரவிச்சந்திரன் அஷ்வின் 1/34, மொஹமட் சிராஜ் 1/26, ஹர்டிக் பாண்டியா 1/28)

இந்தியா: 201/4 (41.2 ஓவ.) (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் ஆ.இ 97 (115), விராட் கோலி 85 (116) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 3/38, மிற்செல் ஸ்டார்க் 1/31)

போட்டியின் நாயகன்: லோகேஷ் ராகுல்

இந்நிலையில் தரம்சாலாவில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இங்கிலாந்தை பங்களாதேஷ் எதிர்கொள்ளவுள்ளதுடன், ஹைதரபாத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பாகிஸ்தானை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது.

# 2024 களத்தில் கனடா அணி

9ஆவது ஐசிசி டி20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் 2024 நடைபெற உள்ளது. குறித்த போட்டியில் 20 அணிகள் பங்கேற்க உள்ளன. அதில் ஐசிசி டி20 தரவரிசையில் முதல் 10 இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

மற்ற அணிகளுக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் பெர்முடாவின் ஹாமில்டனில் நடைபெற்ற அமெரிக்க பிராந்திய தகுதிச் சுற்று இறுதிப் போட்டியில் பெர்முடா மற்றும் கனடா அணிகள் மோதின.

இதில், வெற்றியின் மூலம் கனடா அணி அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஐசிசி டி20 உலகக்கிண்ண தொடருக்கு தகுதி பெற்றுள்ளது.



டி20 உலகக்கோப்பை தொடருக்கு கனடா அணி தகுதி பெறுவது இதுவே முதல் முறையாகும்.

தேசிய மட்டப் போட்டிக்கு

## கம்பளையில் 15 வீரர்கள் தெரிவு

■ நவி




மத்திய மாகாணத்தில் சோட்டோகான் கராத்தே சம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்ற கம்பளையைச் சேர்ந்த எஸ். பி. சந்திரமோகன் சோட்டோகான் கராத்தே கழகத்தின் 15 வீரர்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இல்ல விளையாட்டுப் போட்டிகள்





பாலமுனை ஹில்ப் சமூக சேவைமன்ற பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை (07) நடைபெற்றுள்ளன. இந்நிகழ்வில் பிரதம அதீதியாக எஸ் எம் சபீஸ் கலந்துகொண்டுள்ளார்.

நூருல் ஹுதா உமர்

# இராமகிருஷ்ணன் மிஷன் சம்பியன்



மண்முனை தென்மேற்கு கோட்ட மட்ட ஆசிரியர்களுக்கு இடையிலான எல்லே போட்டியில் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ணன் மிஷன் வித்தியாலயம் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியில் கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ணன் மிஷன் வித்தியாலயமும், முனைக்காடு வித்தியாலயமும் பங்கேற்றுள்ளன.

முதலில் களமிறங்கிய முனைக்காடு வித்தியாலய ஆசிரியர் அணி 4 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. எதிர்த்தாடிய கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ணன் மிஷன் வித்தியாலய அணி 5 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்று இவ்வருட சம்பியனாகியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 10 ஒக்டோபர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.